1987 ஏப்ரல் 20]

திரு. கே. கல்லன்: தலைவர் அவர்களே, அந்த பகுதி பொது மக்கள் ஏறக்குறைய இரண்டு ஏக்கர் பூமியை வாங்கி சர்க்காருக்குக் கொடுத்தும், இந்தத் தொழிற்சாலையின் வேலை துவக்கப் படவில்லை. இதனைத் துரிதப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்து நடவடிக்கையெடுக்கச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நிலம் வாங்கிக் கொடுத்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அங்கே ஏதோ சிக்கல் இருப்பதாக மாண்புமிகு உச்சி அவர்கள் சொல்கிறார்கள். என்ன சிக்கல் இருக்கிறது என்று பார்த்து துரித நடவடிக்கையெடுக்கப்படும். சிக்கல் என்னவென்று யாருக்கும் தெரியவில்லை. அதுவே சிக்கலாக இருக்கிறது. அதிகாரிகளிடம் கலந்து பேசி நடவடிக்கை யெடுக்க ஏற்பாடுகளைச் செய்யலாம்.

தூத்துக்குடி வானொலி நிலையம்.

415—(*வினா எண். 6856) **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் வானொலி நிலையம் அமைக்குமாறு மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தூத்துக்குடியில் வானொலி நிலையம் அமைக்கப்பட உள்ளது.

(ஆ) இவ்வானொலி நிலையம் அமைப்பதற்காக தேவைப் படும் நிலத்தை கையகப்படுத்தி வழங்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க மாநில அரசு நடவடிக்கை மேற் கொண்டு வருகிறது.

[1987 ஏப்ரல் 20

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தூத்துக் குடியில் வானொலி நிலையம் அமைக்கும்போது நல்ல செயல் திறனுள்ள நிலையமாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப் படுமா? ஏனென்றால் இப்போது நாகர்கோவிலில் ஒரு வானொலி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அதற்கு போதுமான செயல்திறன் கிடையாது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் தான் அது பயன்படும். சென்னை, திருச்சி போன்ற இடங்களில் அந்த நிலையத்தின் நிகழ்ச்சிகளை கேட்க முடியாது. ஆகவே திறனுள்ள நிலையமாக அதை அமைக்க வேண்டும். மேலும் அந்த நிலையத்தில் நிகழ்ச்சி நேரம் மாலை 6 மணி முதல் 9 மணி வரை என்று இருக்கிறது. அதனை காலை, மதியம், மாலை, இரவு என்று எல்லா நேரங்களிலும் நிகழ்ச்சிகள் இருக்கிற அளவிற்கு அரசு நடவடிக்கையெடுக்குமா? இதற்கு மத்திய அரசினை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அதிக திறன் கொண்ட வானொலி நிலையம் அமைக்க மாநில அரசு மத்திய அரசிடம் சொல்லியிருக்கிறது. அதற்குத் தேவை யான 5.14 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்துவதற்கு மத்திய அரசு 26.48 லட்சம் ரூபாயைக் கொடுத்திருக்கிறது. அந்த இடத்தை விரைவில் வானொலி பொறியியல் துறைக்கு ஒப்படைக்க வருவாய்த் துறையிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் வேறு எந்தெந்த இடங்களில் வானொலி நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசை மாநில சர்க்கார் வற்புறுத்தி இருக்கிறது? மதுரையில் வானொலி நிலையம் அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்து முடித்து கட்டடங்கள் எல்லாம் கட்டி முடித்து ஆறு மாதங்கள் ஆகின்றன. அங்கே வேலை பார்க்கும் பணியாளர்களுக்கு விடுதியும் கட்டி முடித்தாகி விட்டது. இன்னும் அந்த நிலையம் இயங்கவில்லை. அதனை இயங்க வைப்பதற்கு மத்திய அரசை மாநில சர்க்கார் வற்புறுத் துமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1987 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் புதிய வானொலி நிலையங்களை அமைப்பதற்கு மத்திய அரசை வற்புறுத்த, அது நடவடிக்கையில் இருக்கிறது. மதுரையைப் பொறுத்தவரையில் ஏற்கனவே ரூபாய் மூன்று கோடி செலவில் 10 கிலோவாட்ஸ் திறனுள்ள ஒலிபரப்பு நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடாகி, திறப்பதற்கு தயார் நிலையில் அது இருக்கிறது. மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சர் வராததால் அதன் திறப்பு விழா தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

திரு. சு. சிவராஜ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் புதியதாக வானொலி நிலையம் துவங்குவதற்கு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது என்று தெரிவித்தார்கள். அதைப்போல மலைவாசஸ்தலமாக இருக்கிற கல்ராயன் மலையிலும் வானொலி நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக வினா போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற போது, கல்ராயன் மலையில் வானொலி நிலையம் அமைப்பதற்கு தனியாக கேள்வி போடும்படி சொன்னார்கள். அங்கே வானொலி நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்த மாநில அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விசாரித்து, பின்னர் பதில் சொல்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வானொலி நிலையம் செயல்பட ஆரம்பித்து, அதை தொடக்கி வைக்கின்ற நேரத்திலே, மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் வராத காரணத்தாலே, அது ஒத்திவைக்கப் பட்டதாக மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே தகவல் தெரிவித்தார்கள். ஆனால் உண்மை யிலே எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, மதுரை வானொலி நிலையத்தினுடைய அலைவரிசையும், திருநெல்வேலி நிலையத்தி னுடைய அலைவரிசையும் ஒன்றாக இருந்த காரணத்தாலே, அதாவது ஜாமிங் என்று சொல்வார்கள், இரண்டு அலைவரிசை களின் நிகழ்ச்சிகளும் ஒன்றாக ஒரே நேரத்திலே கேட்ட காரணத் தினால்தான், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூட இதுபற்றி கடிதம் எழுதியிருக்கிறேன். அதனால் ஏற்பட்ட சிக்கலின் காரணமாகத்தான், அந்த அலைவரிசையை மாற்று வதற்காகத்தான் அந்த நிகழ்ச்சியை ஒத்திவைத்திருக்கிறார்கள் என்ற விஷயம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதுமட்டுமல்லாமல் ராமேஸ்வரத்திலே ஒரு டி. வி. நிலையம் அமைப்பதற்காக, மைய அரசை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரையோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்த தகவல் தமிழ்நாட்டில் உள்ள வானொலி நிலையம் தந்த தகவலின் அடிப்படையில் உள்ளது.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் மே மாதம் 1 ஆம் தேதி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜிவ்காந்தி அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் சேலத்திற்குச் செல்ல இருக்கிறார்கள். அந்த நாளிலே மதுரை வானொலி நிலையத்தை திறப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, திறப்பதற்கு மாநில அரசு வலியுறுத்தும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS